©
தமிழ்நாடு அரசு
2008

கையெழுத்துத் தொடர்

நிதி (படிகள்)த் துறை

அரசாணை எண் 3, நாளது சனவரி 5, 2008

(சர்வஜித், மார்கழி 20, திருவள்ளுவர் ஆண்டு 2038)

**மிகை ஊதியம் – சிறப்பு மிகை ஊதியம் – 2006–2007 ஆம் ஆண்டு – அனுமதி – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.**

---

படிக்கவும்:–

1) அரசு ஆணை (நிலை) எண்.690, நிதித்(படிகள்)துறை, நாள் 28.12.2006
2) மத்திய அரசு, புது டெல்லி, நிதியமைச்சகம், செலவுத்துறையின் 11.09.2007ஆம் நாளிட்ட ஓ.எம்.எண்7/24/ E.III(A)/2007 ஆம் எண்ணுள்ள அலுவலகக் குறிப்பாணை

<<>>

**ஆணை:-**

முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப்பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசின் மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகையை 2006–2007 ஆம் ஆண்டிற்கு மிகை ஊதியமாக வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

2) அதற்கிணங்க முறையான காலமுறைச் சம்பளம் பெறும் 'இ' மற்றும் 'ஈ' தொகுதியைச் (C&D Group) சேர்ந்த அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள், நெடுஞ்சாலைத்துறையில் முறையான காலமுறைச் சம்பளத்தில் பணிபுரியும் சாலைப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசின் மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு 2006–2007 ஆம் நிதியாண்டுக்காக, திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகை மிகை ஊதியமாக வழங்கப்படவேண்டும் என அரசு உத்திரவிடுகிறது. மிகை ஊதியம் 31–3–2007 ஆம் நாளன்றுள்ளவாறான ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்படவேண்டும். மாதாந்திர ஊதியம் ரூ.2,500/– என்பதாகக் கொண்டு, மிகை ஊதியத்தொகை கணக்கிடப்படவேண்டும். திருத்த சம்பள வீதத்திற்கு முந்தைய சம்பள வீதங்களில் சம்பளம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில், திங்களொன்றுக்கு ரூ.2,500/– என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டு அவர்கள் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் மிகை ஊதியம் கணக்கிடப்படவேண்டும். இந்த உச்சவரம்பு திருத்த சம்பள வீதங்களுக்கு முந்தைய சம்பள வீதங்களில் பெற்ற ஊதியங்கள் அல்லது திருத்த சம்பள வீதங்களில் பெற்ற ஊதியங்கள் இவற்றில் எந்த ஊதியமாக இருப்பினும் இரண்டிற்குமே பொருந்தும். மிகை ஊதியம் / சிறப்பு

மிகை ஊதியம் இந்த அரசாணையின் இணைப்பில் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கத்தக்கதாகும்.

3) பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு / இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஊதிய விகிதம், அனைத்திந்தியப் பணி விதி முறைகள் ஆகியவற்றின் கீழ் வருகின்றவர்கள் உட்பட 'அ' மற்றும் 'ஆ' தொகுதியைச் சேர்ந்தவர்கள், இந்த மிகை ஊதியத் திட்டத்தின்கீழ் வரமாட்டார்கள். அவர்கள் எந்தவொரு மிகை ஊதியத் தொகையைப் பெறவும் தகுதி உடையவர்கள் அல்லர். இந்த வகைப் பணியாளர்களுக்குச் சிறப்பு மிகை ஊதியம் வழங்க அரசு முடிவெடுத்து, பல்கலைக்கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு/இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சம்பள விகிதம், அனைத்திந்தியப்பணி விதிமுறைகள் ஆகியவற்றின் கீழ் வருகின்றவர்கள் உட்பட 'அ' மற்றும் 'ஆ' தொகுதியைச் சேர்ந்த பணியாளர்களுக்கு இந்த ஆண்டு சிறப்பு மிகை ஊதியமாக ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

4) ஒரு நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்த சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதிநேர பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறும் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறும் சத்துணவுத் திட்டப்பணியாளர்கள் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் (Anganwadi Workers), வரையறுக்கப்படாத ஊதிய விகிதத்தில் (Non-standard time scale of pay) உள்ள சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் (Anganwadi Workers) மற்றும் கிராம உதவியாளர்கள் (Village Assistants), ஒப்பந்தப் பணியாளர்கள், ஒப்பந்த அடிப்படையிலான தற்காலிக உதவியாளர்கள் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு சிறப்பு மிகை ஊதியம் ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) அனுமதிக்கத்தக்கதாகும்.

5) மாநில அரசில் இருந்து நிறுவனங்கள், வாரியங்கள் ஆகியவற்றில் அயல்பணியில் பணியாற்றி வருபவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இருந்து மிகை ஊதியம் / பரிவுத் தொகை பெறாமல் இருந்தால் அவர்கள் இந்த மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெற தகுதி உடையவர் ஆவார்.

6) மிகை ஊதியம் மற்றும் சிறப்பு மிகை ஊதியம் குறித்த செலவு, சம்பந்தப்பட்ட துறையின் தொடர்புடைய பணிக்கணக்குத் தலைப்பின்கீழ் நேர்விற்கேற்ப "01. சம்பளங்கள்" என்ற நுணுக்கத் தலைப்பின்கீழ் வரும் "04. ஏனைய படிகள்" என்ற நுணுக்க உட்தலைப்பின்கீழ் அல்லது "02.ஊதியங்கள்" என்ற நுணுக்கத் தலைப்பின்கீழ் பற்றெழுதப்படவேண்டும்.

7) ஒப்பந்த அடிப்படையிலான தற்காலிக உதவியாளர்களின் சிறப்பு மிகை ஊதியம் குறித்த செலவு, சம்பந்தப்பட்ட துறையின் தொடர்புடைய பணிக்கணக்குத் தலைப்பின்கீழ் நேர்விற்கேற்ப "33. தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல்" "04. ஒப்பந்த ஊதியம்" என்ற நுணுக்கத் தலைப்பின்/ நுணுக்க உட்தலைப்பின்கீழ் பற்றெழுதப்படவேண்டும்.

8) சிறப்பு மிகை ஊதியத் தொகை அதிகரித்து வழங்கப்படுவதினால் ஏற்படும் கூடுதல் செலவிற்கான நிதி ஒதுக்கம் 2007–08 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் சேர்க்கப்படும்.

9) இந்த ஆணை கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் 1630 (ஆயிரத்து அறுநூற்று முப்பது) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு. ஞானதேசிகன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை–32.
ஆளுநர் செயலாளர், ராஜ் பவன், சென்னை–32.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை–32.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்)
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும்.
அனைத்து துறைத்தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் / அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத்தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத்தலைவர் ( கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18. (பெயரில்)
மாநில கணக்குத் துறைத் தலைவர் ( தணிக்கை–I), சென்னை–35.
மாநில கணக்குத் துறைத் தலைவர் ( தணிக்கை–I), சென்னை–35.( பெயரில்)
மாநில கணக்குத் துறைத் தலைவர் ( தணிக்கை–II), சென்னை–6
மாநில கணக்குத் துறைத் தலைவர் ( தணிக்கை–II), சென்னை–6. (பெயரில்)
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உ.த.பி), சென்னை–9./மதுரை.
இயக்குநர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை–15.
சம்பளக் கணக்குகள் அலுவலர் ( கிழக்கு ), சென்னை–5.
சம்பளக் கணக்குகள் அலுவலர் ( தலைமைச் செயலகம் ), சென்னை–9.
சம்பளக் கணக்குகள் அலுவலர் ( தெற்கு ), சென்னை–35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் ( வடக்கு ), சென்னை–79.
சம்பளக் கணக்குகள் அலுவலர், மதுரை–625 001.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
அனைத்துத் துணைக் கருவூலக அலுவலகங்கள்.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்ற ஆணையாளர், எண்.6, மாணிக்கேஸ்வரி சாலை, சென்னை–10.
அனைத்து பல்கலைக் கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்குச் சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.

ஆணையாளர், மாநகராட்சி, சென்னை/மதுரை/ கோயம்புத்தூர்/திருச்சிராப்பள்ளி/சேலம்/
திருநெல்வேலி/ஈரோடு/திருப்பூர்.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத்திட்டம்,
லேட்டீஸ் பிரிட்ஜ் ரோடு, சென்னை–20.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச் சங்கங்கள்.

நகல் பெறுநர்:-
அரசுத் தலைமைச் செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை–9.
அரசு நிதித்துறை செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை–9.
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதாரவிவகாரங்கள் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் ( வங்கிகள் வருவாய்த்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், வெளிவிவகார அமைச்சகம், புதுடில்லி.
முதுநிலை ஆராய்ச்சி அலுவலர், சம்பள ஆராய்ச்சிப் பிரிவு, நிதி அமைச்சகம் (செலவுத்துறை), அறை
எண்.261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

7/1/08
பிரிவு அலுவலர்

## இணைப்பு

i) இந்த ஆணைகளின்படி மிகை ஊதியம் வழங்குவதற்கான ஊதியங்களை 31–3–2007 அன்றுள்ளவாறான அடிப்படைச் சம்பளம், தனி சம்பளம், சிறப்புத் தனிச் சம்பளம், அகவிலைப்படி ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படவேண்டும். திருத்திய சம்பள வீதத்திற்கு முந்தைய சம்பள வீதத்திலேயே சம்பளம் பெறும் பணியாளர்களைப் பொறுத்தவரையில் ஊதியம் மேற்கண்டவாறே கணக்கிடப்படவேண்டும். ஆனால் இதில் அகவிலை ஊதியம், வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மற்றும் ஏனைய ஈட்டுப்படிகள் சேர்க்கக்கூடாது. பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் (பணி–எஸ்) துறையின் 30–7–1998 ஆம் நாளிட்ட 190 ஆம் எண் அரசாணையில் கண்டுள்ளவாறு அரசுப் பணியாளர்கள் 'அ', 'ஆ', 'இ' மற்றும் 'ஈ' தொகுதியினர் என வகைப்படுத்தப்படவேண்டும்.

ii) 31–3–2007 அன்று பணியிலிருந்து, 1–4–2006 லிருந்து 31–3–2007 வரையில் ஓர் ஆண்டு முழுவதும் பணியாற்றிய பணியாளர்கள் 30/30 நாட்களுக்குரிய ஊதிய வீதத்தில் இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ள மிகை ஊதியத்தொகை முழுவதையும் பெறத் தகுதி உடையவர்களாவர்.

iii) 2006–2007 ஆம் ஆண்டில் ஆறு மாதமும் அதற்கு மேலும், ஆனால் ஓர் ஆண்டுக்குக் குறைவாகப் பணியாற்றியுள்ள பணியாளர்கள், விகிதாச்சாரப்படி மிகை ஊதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். இவ்விதியில் செயல் நோக்கத்திற்காக, 15 நாட்களுக்குக் குறைவான பணிக்கால அளவு கருத்தில் கொள்ளப்படமாட்டாது; பதினைந்து நாட்களும் அதற்கு மேற்பட்ட பணிக்கால அளவும் முழுமாதப் பணிக்காலமாகக் கருதப்படவேண்டும்.

iv) மிகை ஊதியம், முழு ரூபாய் மதிப்பில் கணக்கிடப்படும்; அதாவது, 50 காசுகளும் அதற்கு மேலும் இருந்தால், அடுத்த ரூபாய்க்கு முழுமையாக்கப்படவேண்டும்; 50 காசுகளுக்குக் குறைவான சில்லறை விட்டுவிடப்படவேண்டும்.

v) மிகை ஊதியத்தைக் கணக்கிடுவதற்கான பணிக்கால அளவில், சம்பளமில்லா விடுப்பு நீங்கலான அனைத்து விடுப்புக்கால அளவும் சேர்த்துக் கொள்ளப்படும். 2007 மார்ச்சு திங்களில் சம்பளமில்லா விடுப்பில் / அரை சம்பள விடுப்பில் / சம்பளம் இல்லாத கல்வி விடுப்பில் இருந்த பணியாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் விடுப்பில் செல்வதற்குமுன் கடைசியாகப் பெற்ற ஊதியத்தை அடிப்படையாகக் கொண்டு, மிகை ஊதியம் நிர்ணயிக்கப்படவேண்டும்.

vi) 2006–2007 ஆம் ஆண்டில் எப்போதாவது தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த பணியாளர்களைப் பொறுத்தவரையில், தற்காலிகப் பணிநீக்கக் காலஅளவில் அவருக்கு வழங்கப்பட்ட வாழ்க்கை படிகளை ஊதியமாகக் கருதக்கூடாது. அத்தகைய பணியாளருக்கு அவருடைய தற்காலிகப் பணி நீக்கக் கால அளவு, பணிக்கால அளவாகக் கருதப்படுகிறபோது மிகை ஊதியம்/ சிறப்பு மிகை ஊதியம் வழங்கலாம். ஏனைய இனங்களில் மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியத்தை வழங்குவதற்கு தற்காலிக பணி நீக்கக் கால அளவைச் சேர்க்கக்கூடாது. 31–3–2007க்குப் பிறகு தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தால், மிகை ஊதியம் வழங்கத் தடை ஏதுமில்லை.

vii) 31–3–2007க்கு முன் வயது முதிர்வு காரணமாக ஓய்வுபெற்ற / தாமாகவே முன்வந்து பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் / பணியிலிருக்கும்போது இறந்துவிடும் பணியாளர்கள் / பணியில் இருக்கும்போது ஏலாமையுற்ற பணியாளர்கள் மேற்கண்ட வரம்பு நிபந்தனை (iii)க்கு உட்பட்டு, அவர்கள் உண்மையில் ஆற்றிய பணிக்கால

அளவின் அடிப்படையில் மிகை ஊதியம்/ சிறப்பு மிகை ஊதியம் பெற தகுதி உடையவர்களாவர்.

viii) வயது முதிர்வடைவதன்பேரில் ஒய்வு பெற்று மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட பணியாளர்கள் மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெற தகுதி உள்ளவர்கள் அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்கு முன்பும் பின்பும் பணியாற்றிய மொத்தக் கால அளவு ஆறு மாத கால அளவுக்குக் குறையாமல் இருக்குமானால் மேலே (ii) (iii) வரம்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்கு முந்தைய மற்றும் பிந்தைய கால அளவுக்கான தகுதிப் பணிக்கால அளவு தனித்தனியாகக் கணக்கிடப்படவேண்டும். வயது முதிர்வடைந்து ஒய்வு பெறுவதற்கு முந்தைய கால அளவிற்கும், மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்குப் பிந்தைய கால அளவிற்கும் அனுமதிக்கத்தக்க மொத்த தொகை அனுமதிக்கத்தக்க மிகை ஊதியத்தின் அளவிற்கு மிகைப்படாமல் வரையறை செய்யப்பட வேண்டும்.

**(உண்மை நகல்)**

7/1/08

பிரிவு அலுவலர்